www.tamilarangam.net

Liberation Tigers Of TAMIL EELAM

# செய்திக் கதிர்

தொலைபேசி இல : 43 58 11 42
செய்திச் சேவை இல 46 36 49 49

தமிழீழ விடுதலைப் புலிகள்
பிரான்சுக் கிளை

16-03-1990

# வரதர், மூட்டை முடிச்சுகளுடன் நாட்டை விட்டுச் சென்றார்!

## இந்தியவிமானப்படை விமான மூலம் குடும்பத்தினர் சகிதம் பறந்தார்

(தினகரன் 13-03-90)

**வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த திரு. வரதராஜப்பெருமாள் ஞாயிறு மூட்டை முடிச்சுகளுடன் இந்திய விமானப்படை விமானமொன்றின் மூலம் திருமலையை விட்டு வெளியேறினார்.**

இந்தியத் துருப்புகள் இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு முன்னதாகவே திரு. வரதராஜப் பெருமாள் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறினார். இந்தியாவுக்கு இவர் சென்றாரென தமிழ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி பிரெஞ்சு செய்தி நிறுவனமான ஏ. எவ். பி தெரிவித்தது.

திரு. வரதராஜப் பெருமாள் தனது குடும்பத்தினருடனும் நம்பிக்கையான சில அதிகாரிகளுடனும் திருகோணமலையை விட்டு இந்திய விமானப் படை விமானத்தில் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றாரென அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் இந்தியாவில் எங்கு நோக்கிச் சென்றார் என்பது திட்டவட்டமாக அந்த வட்டாரங்கள் உறுதிப்படுத்தவில்லை.

இது பற்றித் தமக்கு எதுவும் தெரியாதென கொழும்பிலுள்ள ஈ பி ஆர் எல் எவ் முக்கியஸ்தரொருவர் தெரிவித்தார். ஆனால் நேற்று என்று அழைக்கப்படும் திருமலையைச் சேர்ந்த ஈ பி ஆர் எல் எவ் முக்கியஸ்தர் திரு. வரதராஜப் பெருமாள் நாட்டைவிட்டுச் சென்றாரென உறுதிப்படுத்தினார்.

சென்னைக்கு வரதராஜப் பெருமாள் எங்கு இருக்கிறார் என்பது பற்றி எவ்வித தகவலும் இல்லையென்று அங்கு சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறின.

பெருமாள் நாட்டைவிட்டு வெளியேறியமை வடக்கு கிழக்கு மாகாண சபை முடிவடைந்ததைக் காட்டுவதாக வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இந்தியத் துருப்புகள் இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு முன்னரே வடக்கு, கிழக்கிலுள்ள ஈ. பி. ஆர். எல். எவ் முக்கியஸ்தர்கள் நாட்டைவிட்டு வெளியேறி விடுவார்களெனக் கூறப்படுகிறது.

---

வீரகேசரி 14-03-90

## திருமலை நகருக்குள் புகுந்த புலிகளுக்கு மக்கள் வரவேற்பு

திருகோணமலை.

இந்தியப் படையினர் வெளியேறியதை அடுத்து நேற்றுக் காலை திருகோணமலை நகருக்குள் விடுதலைப் புலிகள் இயக்கப் பொறுப்பாளர் தயா தலைமையில், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஆயுத பாணிகளாகப் பிரவேசித்தனர்.

சாம்பல் தீவு, தம்பலகாமம் பகுதி புலிகளின் பொறுப்பாளர்களும் இவர்களுடன் அணி வகுத்துச் சென்றனர்.

திருமலை பிரதான சந்தியில் வைத்து மக்கள் திரண்டு வந்து இவர்களை வரவேற்றனர்.

விடுதலைப் புலிகளின் திருமலைப் பகுதி பொறுப்பாளர்களைத் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் ஆயுத பாணிகளாக இராணுவச் சீருடை சகிதம் காணப்பட்டனர்.

புலிகளின் திருமலை பொறுப்பாளர் தயா கருத்து வெளியிடுகையில், சிவில் நிர்வாகத்தை நிலை நிறுத்தி மீண்டும் அமைதியை ஏற்படுத்துவதே எமது பணியாக இருக்கும் என்றார்.

---

மட்டக்களப்பில் — வீரகேசரி 14-03-90

## இரு இலங்கை இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டன

(அன்டன் எட்வேர்ட்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கரடியனாறு, புலிபாய்ந்தகல் ஆகிய பகுதிகளில் அமைந்திருந்த இலங்கை இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்களுக்கும் உயர்கல்வி அமைச்சரும், தொழில் நுட்ப அமைச்சரும், வடக்கிழக்கு மாகாண சமாதான குழுவின் தலைவருமான ஏ.சி.எஸ். ஹமீத்திற்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் விளைவாகவே இவ்விரு முகாம்களும் அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வடகிழக்கில் உள்ள முக்கிய கேந்திர பாதுகாப்பு தளங்களைத் தவிர ஏனைய இடங்களில் உள்ள இலங்கை இராணுவ முகாம்கள் அகற்றப்படவேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# இலங்கை அகதிகள்

## வருகைக்கு ஒரிஸ்ஸா பூர்வீகக் குடிகள் எதிர்ப்பு

([illegible] 14-3-90)

புவனேஸ்வர் மார்ச் 13

இலங்கைத் தமிழ் அகதிகள் சுமார் 1,000 பேர் ஒரிஸ்ஸா மாநிலத்துக்குக் கொண்டு வரப்பட்டது குறித்து பூர்வீகக் குடிகள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

ஈ பி ஆர் எல் எப் செயலாளர் நாயகம் திரு கே பத்மநாபா வடக்கு கிழக்கு மாகாண சபையின் பல அமைச்சர்கள் ஈ பி ஆர் எல் எப் - மற்றும் ஈ என் டி எல் எப் - டெலோ ஆகிய இயக்கங்களின் உறுப்பினர்கள் மாகாண சபை அதிகாரிகள் அவர்களின் குடும்பத்தினர் முதலான பலர் கப்பலிலும் விமானத்திலும் ஒரிஸ்ஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்கள் எல்லோரும் சுமார் 620 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மல்கன்கிரியிலும் சாதிக்குடாவிலும் உள்ள முகாம்களில் வைக்கப்படுகின்றார்கள்.

அதற்குத்தான் அங்குள்ள பூர்வீகக் குடிகளின் சங்கங்கள் ஆட்சேபம் தெரிவித்த மாவட்ட கலெக்டருக்கு மகஜர்கள் கொடுத்திருக்கின்றன.

தங்களின் (பூர்வீகக் குடிகளின்) நல்வாழ்வை அடியோடு கவனிக்காமல் கைவிட்டு பிறத்தியாக மேன்மேலும் அகதிகளைக் கொண்டு வருவதா என்று சங்கங்கள் கேட்டிருக்கின்றன.

இதேவேளை திரு பத்மநாபா கருத்துத் தெரிவிக்கையில் எவ்வளவு விரைவில் எமது தாயகத்திற்குத் திரும்ப முடியுமோ அவ்வளவு விரைவில் திரும்புவது என்று தீர்மானித்திருக்கிறோம் என்று சொன்னார்.

வடக்கு கிழக்கு முதலமைச்சர், திரு அ வரதராஜப் பெருமாளும் தமது மனைவி மகள் மற்றும் சில அதிகாரிகள் சகிதம் இந்திய விமானப் படை விமானத்தில் ஏறிச் சென்று விட்டார். அவர் எங்கு சென்றார் இப்போது எங்கே இருக்கிறார் என்ற விபரங்கள் மர்மமாகவே உள்ளன. [உ]

(வீரகேசரி 15-03-90)

# 5வருட அகதி வாழ்வின் பின் தமது இருப்பிடம் திரும்பினர்!

## கொக்கிளாய் மக்கள் மகிழ்ச்சி

முல்லைத்தீவு.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி பகுதி மக்களில் 75 வீதமானோர் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறி உள்ளனர்.

மேற்படி கிராமங்களில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுக் கடையும் திறக்கப்பட்டுள்ளது. போக்குவரத்தும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்காலிக குடிசைகளை அமைத்து மக்கள் குடியிருக்கின்றனர்.

புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. ஐந்து வருட அகதி வாழ்க்கையின் பின் அப்பகுதி மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பியதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

(வீரகேசரி 15-03-90)

# பெங்களூரில் பெருமாள்?

(அன்டன் எட்வேர்ட்)

வட-கிழக்கு மாகாண முதல்வர் வரதராஜப்பெருமாள் எங்கே என்ற மர்மம் இன்றும் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆயினும் அவர் தமது குடும்பத்துடனும் சில அதிகாரிகளுடனும் பெங்களூரில் இருப்பதாக அரசுக்கு தகவல் கிடைத்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது.

# திருகோணமலை எல்.ரி.ரி. ஈ.யின் ஆதிக்கத்துக்குள் வந்துவிடும்

([illegible] 14-03-90)

## யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது

### மாமூல் நிலை தோன்றிவிட்டது

திருகோணமலை நகரத்துக்குள் எல்.ரி.ரி.ஈ. யினர் இரண்டொரு தினங்களில் புகுந்து விடுவார்கள் என்ற நம்பிக்கை திருமலை மக்களிடம் ஏற்பட்டுள்ளது. துறைமுகத்திலுள்ள இந்தியப்படையினர் வெளியேறியதும் புலிகளே முழுப் பொறுப்பையும் ஏற்கும் நிலை உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மாகாண சபை நிர்வாகத்தை நடத்திய முக்கிய பிரமுகர் ஒருவரையும் அங்கு காணவில்லை. ஒருசில சிற்றூழியரே அங்கு நின்றார்கள். அலுவலகங்கள் மூடிக் கிடந்தன. மாகாண சபையே இல்லாதது போன்ற நிலையிலேயே யாவும் நடைபெற்று வருகின்றன.

வடக்கேயும் கிழக்கேயும் சென்ற எல்.ரி.ரி.ஈ. தலைவர்கள் நேற்று காலை கொழும்பில் எதிர்பார்க்கப்பட்டார்கள். இலங்கை அரசாங்க அதிகாரிகளுடன் நிலைமையை எடுத்து விளக்கி உடனடியாகச் சில ஏற்பாடுகளைச் செய்யும்படி இவர்கள் வற்புறுத்துவார்கள் எனத் தெரிகிறது.

வட பகுதி முற்றிலுமே எல்.ரி.ரி.ஈ இன் ஆதிக்கத்திலேயே வந்துவிட்டது. காங்கேசன்துறை முகத்தில் இன்னும் ஒரு சில இந்தியர்கள் காணப்படுகிறார்கள். இவர்களும் இன்று அல்லது நாளை சென்று விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாண நகரம் மிகச் சுறுசுறுப்பாக இயங்குகிறது. தெருக்களில் எல்லாம் சனக் கூட்டம் இரவு நேரங்களிலும் காண முடிகிறது.

காலையிலேயே பள்ளி மாணவர்கள் முன்பு போல பாடசாலைக்கும் ரியூட்டரிகளுக்கும் செல்கின்றார்கள். சந்தைகள் வழமை போல நடக்கின்றன. இரவு பஸ் சேவைகளும் நடத்தப்படுகின்றன. கொள்ளைச் சம்பவங்கள் நடைபெறுவதில்லை. பொலிசார் இல்லா விட்டாலும் எல்.ரி.ரி.ஈ. யினர் தக்க பாதுகாப்பு நடவடிக்கையை எடுத்து வருகின்றனர்.

# மன்னார் நீதிமன்ற அலுவலகம் இயக்கம்

(ஈழநாடு 10-3-90)

தலைமன்னார்.

நீண்டகாலமாக இயங்காமல் இருந்து வந்த மன்னார் நீதிமன்ற அலுவலகம் இப்பொழுது மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

அதிகாரிகள், ஊழியர்கள் அலுவலகத்துக்கு தினமும் வந்து கடமைகளை செய்கின்றனர்.

ஆனால் நீதிமன்றம் இன்னமும் இயங்கத் தொடங்கவில்லை.

இது இவ்விதமிருக்க மன்னார் பகுதியின் சகல சந்திகளிலும் விடுதலைப் புலிகளின் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

www.tamilarangam.net

# திருட்டு வாகனங்கள் திருமலையில் கொள்ளை மலிவுக்கு விற்பனை

தினகரன் (10-03-90)

இந்தியப் படையினர் இலங்கை மண்ணை விட்டு வெளியேற வேண்டிய இறுதி நாள் நெருங்கிக் கொண்டிருப்பதால் மட்டக்களப்பிலும் வவுனியாவிலும் திருடிக்கொண்டு வந்த வாகனங்களைத் திருமலையில் விற்கும் கடைசி நேர முயற்சிகளில் ஈபிஆர் எல்எப் உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் வெளியேறிய பகுதிகளிலிருந்து ஈ. பி. ஆர். எல் எப் உறுப்பினர்கள் திருடிய லைறஸ் வான்கள், டொயோட்டோ வான்கள், டபிள் கப் வான்கள், மற்றும் வாகனங்கள் மிக மலிவான விலைக்கு விற்கப்படுகின்றன. இந்த வாகனங்களில் சில 50000 ரூபாவுக்கு விற்கப்படுகின்றன.

திருகோணமலைத் துறைமுகம் சுறுசுறுப்பாகக் காணப்படுகிறது. இந்திய அமைதி காக்கும் படையினர் கொண்டு வந்த டிரக்குகளும், ஜீப் வண்டிகளும் இந்தியக் கப்பல்களில் ஏற்றப்படுகின்றன. திருமலைப் பட்டினத்தில் இந்தியப் படையினர் நடமாடுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. திருமலை மாவட்டத்திலிருந்து வெளியேறிய இந்தியப் படையினர் தற்பொழுது திருமலைப் பட்டினத்தில் மட்டும் உள்ளனர். இவர்கள் திருகோணமலையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் கடைசி நேர நடவடிக்கையாகச் சாமான்களை வாங்குவதில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையில் பாலம் பட்டாறு என்ற இடத்தில் புலிகள், ஈ. பி. ஆர். எல். எப். உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய இராணுவத்தினரும் திருமலைக்கு வருகிறார்களா என்பதைக் கண்டு பிடிக்கும் பொருட்டுத் தடை முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இந்தியப் படையினர்கள் சாமான்களை வாங்குவதில் ஈடுபட்டிருக்கையில் இந்தியப் படை உயர் அதிகாரிகளும், இலங்கை அரசாங்க அதிகாரிகளும் பிரியாவிடை வைபவங்களை ஒழுங்கு செய்துள்ளனர்.

# வரதராஜர் நிலை என்ன?

13-03-90

வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சராயிருந்த அ. வரதராஜப் பெருமாள் இலங்கையிலிருந்து வெளியேறிவிட்டார். அநேகமாக இவரும் இந்தியாவுக்கே சென்றிருக்கக் கூடும் என்றே நம்பப்படுகிறது.

இந்திய அமைதிப் படையை நம்பி அதனோடு உறவு வைத்தார். இப்போது இந்தியப் படையின் உதவி இல்லை. உள்நாட்டு ஆதரவும் இல்லை. காட்டுக்குள் செல்வேன் என்றார். காடும் பாதுகாப்பான இடம் அல்ல என்று நினைத்து வெளியேறி விட்டார் போலும்.

மாகாண சபை இல்லை; அமைச்சர்கள் இல்லை. அலுவலகமே இல்லை என்கின்ற நிலையில் வேறு என்ன பார்க்கப் போகின்றார் இருக்கிறது?

பிரஜைகள் தொண்டர் படை, பாடசாலை மாணவரைக் கொண்ட தமிழ் தேசிய இராணுவம் ஆகியனவும் மறைந்துவிட்டன.

சுதந்திரப் பிரகடனம் பற்றிப் பேசினார். இவரும் இவரது சகாக்களும் சேர்ந்து மாகாண சபையைத் தமிழ் ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவை என்று பெயர் மாற்றமும் செய்தார்கள். இப்போது இது ஒரு கேலிக் கூத்தாகிவிட்டது. மக்களைக் கலந்தாலோசிக்காது தன்னிச்சையாகப் பிரகடனம் செய்தார். இப்போது நிலை அம்பலமாகிவிட்டது. தமிழ் பேசும் மக்களே இப்பிரகடனத்தைப் பெரிதாகக் கொள்ளவில்லை. இவரது முதல் முயற்சியே இப்படி முடிந்தது என்றால் அடுத்ததை எப்படி இருக்கும் என்ற கேள்வி மக்களிடம் எழுந்துள்ளது.

மக்கள் மாத்திரமல்ல யாருக்கு ஆத்திரமூட்ட வேண்டும் என்று நினைத்தாரோ அந்த அதிகாரபீடமே இப்பிரகடனத்தைப் பெரிதாகக் கொள்ளவில்லை. வேடிக்கைக் கூத்தாகிவிட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதியும் இவர்களை ஆதரிக்கவில்லை. அகதிகள் என்று கூறிக்கொண்டு உள்ளே அனுமதிய முயன்றவர்களையே திருப்பி அனுப்பிவிட்டார். இவர்கள் இப்போது ஒரிஸ்ஸாவில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

பெருமாள் அவசரப்பட்டு விட்டார். இந்தியத் தூதர் தங்கள் நிலையை அறிவிக்க விரும்புகின்றார். ஜனநாயக வழிக்கு வருவதாக வந்தவர் அதனையே நம்பி நின்றிருக்க வேண்டும். அத்தகைய காரணமாக துடிப்பவர்கள் இத்தகைய முயற்சிகளில் கால் வைத்திருக்கக் கூடாது.

இந்தியப் படையையே நம்பிக்கொண்டு வரதர் நின்றிருக்கக் கூடாது. ஒரு மாறுதலை நிலைமையை மாற்றிவிடுவது இயல்பு. தனது நாட்டில் நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டு வெளியாரை நாடியது அவசரமான நடவடிக்கை. அவசரப்படாது நிதானமாக நடந்திருப்பாராயின் இவரது நிலை வேறாக இருந்திருக்கும்.

இப்போது இவரது நிலை என்ன? இவரது நாடு எது என்ற கேள்வியை மக்கள் கேட்பதில் நியாயமுண்டு.

# கல்முனையில் புலிகள் - பொலிஸ் மோதல் தவிர்க்கப்பட்டது

அம்பாறை.

கல்முனையில் பொலிஸாருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்றுக் காலை ஏற்படவிருந்த மோதல், தக்க சமயத்தில் தடுக்கப்பட்டது. அங்கு சில மணி நேரம் பதற்றம் நிலவியபோதிலும் பின்னர் அமைதி நிலவியது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு முன்னாலுள்ள போக்குவரத்துத் தடையை பொலிஸார் அனுமதியின்றி புலிகள் நீக்கினராம். இதனைப் பொலிஸார் ஆட்சேபித்தனராம்.

இந்த ஆட்சேபனையின் போது பொலிஸார், எச்சரிக்கும் பாவனையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரியவருகிறது.

இதனால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து புலிகள் ஆவேசம் கொண்டவராயினும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் கரிகாலன் அங்கு வந்து பொலிஸ் அதிகாரிகளுடன் பேசியதையடுத்து நிலைமை சுமுகமானது.

சுமார் 10 நிமிட நேரம் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

ஏதோ விபரீதம் நடப்பதாக பயந்த கடைக்காரர்கள் கடைகளை திடீரென மூடினர். வாகனப் போக்குவரத்துகள் ஸ்தம்பித்தன.

அமைதி நிலவியதும் நகர் பிற்பகல் வழமைக்கு திரும்பியது. புலிகள் நீக்கிய போக்குவரத்துத் தடை கடந்த இரு வருடங்களாக இருந்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் நிலைய பாதுகாப்பை முன்னிட்டே இந்த தடை இருந்து வந்தது.

# பாலையூற்றில் புலிக் கொடிகள்

13-03-90

திருகோணமலை மார்ச் 11

தமிழீழ விடுதலைப் புலிகள் மூன்றாம கட்டையிலிருந்த அமோலியா, பாலையூற்று ஆகிய பகுதிகளுக்கு வந்துள்ளனர். அவர்களது கொடிகளும் பறக்கவிடப்பட்டிருக்கின்றன—

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "எம்மை ஏமாற்றினால் விளைவு விபரீதமாக இருக்கும்" (வீரகேசரி 10-3-90)

## வாழைச்சேனை கருத்தரங்கில் பரமமூர்த்தி பேச்சு

செங்கலடி,

ஜனாதிபதி பிரேமதாச மீது நம்பிக்கை வைத்தே பேச்சுவார்த்தையை தொடர்கிறோம். எமது இயக்கத்தை எவரும் எந்தக் காலத்திலும் ஏமாற்ற முடியாது. நாம் சுதந்திரமானவர்கள். எனவே ஏமாற்றினால் விளைவு விபரீதமாகவே இருக்கும் என்று வாழைச்சேனை காகிதஆலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கருத்தரங்கில் பேசுகையில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பரமமூர்த்தி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வாழைச்சேனைப் பொறுப்பாளர் எஸ். பி. (சண்முகராசா) தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் பெருமளவான காகித ஆலை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

திரு. பரமமூர்த்தி தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"விடுதலை என்பது பேச்சுவார்த்தைகள் மூலம் பெறப்பட்டதாக சரித்திரம் இடையாது. அது போராட்டத்தின் பின்பே கிடைத்துள்ளது. கடந்த காலங்களில் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததே நாம் ஆயுதமேந்திப் போராட முனைபட்டோம். ஆனால் இன்று ஒரு புரட்சிகர நிலைமை தோன்றியுள்ளது. ஆயுதம் தாங்கிய விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்பி ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசவுடன் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருக்கின்றனர். இதுபற்றி மக்கள் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்து பேச்சுவார்த்தையைத் தொடர்கின்றோம். எமது இயக்கத்தை எவரும் எந்தக்காலத்திலும் ஏமாற்ற முடியாது. நாம் சுதந்திரமானவர்கள். ஏமாற்றினால் விளைவு விபரீதமாக முடியும்.

இந்தியாவுடன் நாம் நடாத்திய பேச்சுவார்த்தைகளுக்கும் இலங்கை ஜனாதிபதியுடன் நாம் நடாத்தும் பேச்சுவார்த்தைக்கும் இடையே நிறைய வேறுபாடு உண்டு. இது ஒரு நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தையாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இந்தியாவின் ஒரு பகுதியாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்த ஜனாதிபதி இந்தியப்படைகளை வெளியேற்ற விரும்பினார். அத்துடன் இலங்கை பொருளாதாரமும் மோசமான நிலையை அடைந்து கொண்டிருந்தது. எனவே எம்முடன் ஒரு இணக்கமான தீர்வை ஏற்படுத்த அவர் முற்பட்டார். அவர் நல்ல முறையில் எம்மை வரவேற்றார்

### மூன்று கோரிக்கைகள்

பேச்சுவார்த்தையின் போது நாம் மூன்று கோரிக்கைகளை முன்வைத்தோம். முதலாவது இந்தியப்படைகள் வெளியேற வேண்டும் என்பது. அது தற்போது நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

அடுத்த கோரிக்கை பாடசாலை மாணவர்களைப் [illegible] பிடித்து பயிற்சி கொடுத்து அமைக்கப்பட்ட தேசிய இராணுவம் கலைக்கப்பட வேண்டும் என்பது. அடுத்தது வடகிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு அங்கு முறையான தேர்தல் நடாத்தப்பட வேண்டுமென்பது.

இம் மூன்று கோரிக்கைகளும் முழுதாக நிறைவேற்றப்பட்ட பின்னர் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகள் தொடர்பான எமது பேச்சுவார்த்தை தொடரும்.

### இடைக்காலத் தீர்வு

இந்த மாகாண சபை அரசை நாம் ஒரு இடைக்கால நிர்வாகமாகவே ஏற்றுக் கொண்டுள்ளோம். எனவே இருக்கும் மாகாணசபை அரசுக்கு தேர்தலின் பின் நாம ஏற்கப்போம் மாகாணசபை அரசு [illegible] பட்டது.

இந்தியப்படை வெளியேறிய பின் இயக்கங்கள் அனைத்தும் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. ஆனால் புலிகளிடம் ஆயுதங்களை ஒப்படையுங்கள் என்று வது ஒரு கபடமான செயல் என்பது ஜனாதிபதிக்கு நன்கு தெரியும்.

இக் கருத்தரங்கில் தலைப் புலிகள் அரசியல் அமைப்புக் குழு உறுப்பினர் செங்கதிரோன், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதிச் செயலாளர் செல்வி சுதந்தி ஆகியோரும் உரையாற்றினர்.

# தேர்தல் எமது நோக்கமல்ல

வீரகேசரி 12/03/90

## —கிளிநொச்சியில் யோகி

(வவுனியா நிருபர்)

"நாம் ஓர் அரசியல் கட்சியாக எம்மைப் பதிவு செய்து கொண்டாலும் தேர்தல் எமது நோக்கமல்ல, எமது அமைப்பு தேர்தலுக்காகவோ [illegible] குகாகவோ வாழும் அல்லது வாழப்போகும் ஒன்றல்ல" என்று விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் யோகி குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கலை, கலாசார கவின் கல்லூரித் திறப்பு விழாவில் உரையாற்றும் போதே அவர் இதைக் கூறினார். நேற்று முன்தினம் இவ் விழா நடைபெற்றது.

அவர் மேலும் கூறியதாவது:-

உலகத்திற்கே வழிகாட்ட வேண்டுமென்ற வெறி கொண்டவர்கள் விடுதலைப் புலிகள்.

ஒரு நாட்டினுடைய வளர்ச்சியை ஒரு உன்னதமான எழுச்சியை வெளிப்படுத்தி பிரதிபலித்து நிற்பவை அந்த இனத்தின் கலை, கலாசாரம் எம்மைப் பொறுத்தவரை உலகத்திலே தலைசிறந்த உலகத்திற்கு வழிகாட்டுகின்ற ஒன்றாக அது இருக்க வேண்டும் என்ற வெறி கொண்டு அலைபவர்கள் நாங்கள். அதற்காக உழைப்பவர்கள், உடலைத் தந்து, உயிரைத் தந்து வளர்ப்பவர்கள்.

கவிஞர் காசி ஆனந்தன், கிளிநொச்சி பொறுப்பாளர் கோபி, வன்னிப் பகுதி சந்திரன் ஆகியோரும் பேசினர்.


# கிளிநொச்சியில் கவின்கலை கல்லூரி திறந்து வைப்பு

வீ 12/03/90

வவுனியா,

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலாசாரப் பிரிவினால் கிளிநொச்சியில் கவின்கலை கல்லூரியொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதனை முன்னணியின் தலைவர் மாத்தயா கடந்த சனியன்று வைபவரீதியாக திறந்து வைத்தார். இங்கு கட்டுரையாற்றும் வெளிநாட்டு ஓவிய போதகர்கள், போதனாசிரியர்களுக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் யோகி, மாத்தயா ஆகியோர் நியமனக் கடிதங்களையும் வழங்கினர்.

கவிஞர் காசி ஆனந்தன், புலிகளின் கிளிநொச்சி பொறுப்பாளர் யோகி, வன்னிப் பிராந்திய பொறுப்பாளர் சந்திரன், கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் இங்கு கலந்துகொண்டு பேசினர்.




சனி இந்த 20ஆம திகதி வீடு மாறுறதோட பழைய நாடு மாற வைக்குது போல